அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# பொதுத்தேர்வு மாதிரித்தேர்வுத்தாள்

# தமிழ்

## ஆண்டு 5

| | |
|---|---|
| **நேரம்:** 120 மணித்துளிகள் | **மொத்தப்புள்ளிகள்:** 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்:** 12 |
| **சுட்டெண்:** | |

## பகுதி – 1

**1. பொருத்தமான விடையின் முன் புள்ளடி இடுக.**

1. ஈழத்தில் மாதோட்டம் என அழைக்கப்படும் இடம்
   - [ ] திருகோணமலை
   - [ ] வன்னி
   - [ ] மன்னார்

2. மன அடக்கம், மன உறுதி உள்ளவர்களிடம் நிலைத்து நிற்பது
   - [ ] நல்லொழுக்கம்
   - [ ] பணம்
   - [ ] செல்வம்

3. சிறுகூல வகைகளுள் ஒன்று
   - [ ] கிழங்கு
   - [ ] சோளம்
   - [ ] தேயிலை

4. பூனையின் பெண் பெட்டை என்பது போல குரங்கின் பெண்
   - [ ] மறி
   - [ ] மந்தி
   - [ ] பிடி

5. ஒரு வீட்டுக்கு இரண்டு வாயில். அது
   - [ ] கண்
   - [ ] வாய்
   - [ ] மூக்கு

6. நான் விளையாடப் போகவில்லை. இச் சொல்லியம்
   - [ ] ஏவல்
   - [ ] உடன்பாடு
   - [ ] எதிர்மறை

7. ஆர்வமாகக் கேட்டல் என்பதைக் குறிக்கும் மரபுத்தொடர்
   - [ ] காதுகுத்துதல்
   - [ ] செவிமடுத்தல்
   - [ ] கதைகட்டுதல்

8. கற்றது கைமண்ணளவு கல்லாதது
   - [ ] உலகளவு
   - [ ] பனையளவு
   - [ ] தினையளவு

9. தமிழினிமை என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
   - [ ] தமிழ் + இனிமை
   - [ ] தமிழி + இனிமை
   - [ ] தமி + இனிமை

10. வாங்கோ என்பதன் எழுத்துவழக்குச் சொல்
    - [ ] வாருங்கோ
    - [ ] வாங்க
    - [ ] வாருங்கள்

11. முன்னிலைப் பன்மைச்சொல்லாக அமைவது
    - [ ] நாங்கள்
    - [ ] நீங்கள்
    - [ ] அது

12. மரம் + வேர் என்பதன் சொற்சேர்ப்பு வடிவம்
    - [ ] மரவேர்
    - [ ] மரம்வேர்
    - [ ] மாவேர்

13. தூய்மை என்பதன் எதிர்ப்பொருட்சொல்

- [ ] சுத்தம்
- [ ] அழகு
- [ ] அழுக்கு

14. அல்லும்பகலும் படித்தேன். அல்லும்பகலும் என்பது

- [ ] இணைமொழி
- [ ] அடுக்குமொழி
- [ ] இரட்டைக்கிளவி

15. வையகம் என்பதன் ஒத்தபொருட்சொல்

- [ ] வானம்
- [ ] உலகம்
- [ ] மேகம்

(15X1=15 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் சொல்லியங்களில் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை, அடைமொழிகளைத் தெரிவுசெய்து எழுதுக.**

1. அழகிய மயில் தோகையை விரித்தது.
2. சிறுவன் சிவப்புப் பந்தை எடுத்தான்.
3. நான் தமிழ்க் கவிதைகளைப் படிப்பேன்.
4. நிலா ஓவியத்தை அழகாக வரைந்தாள்.

| எண் | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை | அடைமொழி |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |

(16X½= 8 புள்ளிகள்)

**3. அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

1. மக்கள் ____________________ ப் போற்றினர். ( வீரன் )
2. ஆசிரியர் ____________________ ப் படிக்குமாறு கூறினார். ( பாடம் )
3. நான் ____________________ ப் பரிசு கொடுத்தேன். ( நண்பன் )
4. நாம் ____________________ கேட்கிறோம். ( காது )
5. சிங்கம் ____________________ வாழும். ( காடு )

(5X1=5 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் சொற்களைத் தமிழ்மொழியில் எழுதுக.**

(6X1=6 புள்ளிகள்)

**5. அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

| சொற்கள் | திணை | பால் | எண் | காலம் |
|---|---|---|---|---|
| வருவாள் | | | | |
| படிக்கிறார்கள் | | | | |
| ஓடியது | | | | |

(12X½=6 புள்ளிகள்)

**6. வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இன்கலைகள் இரண்டு எழுதுக.

_______________________________________________

2. ஒலிம்பிக் கொடியில் உள்ள ஐந்து வளையங்களும் எவற்றைக் குறிக்கின்றன?

_______________________________________________

3. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?

_______________________________________________

4. ஒழுக்கம் பற்றிக் கூறும் அறநூல்கள் இரண்டு எழுதுக.

_______________________________________________

5. பாமகள் நடனம் ஆடினாள். நாவரசி நடனம் ஆடினாள்.
இச்சொல்லியங்களைச் சேர்த்து எழுதுக.

_______________________________________________

(5X2=10புள்ளிகள்)

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப் பற்றி 50 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. பாரதியார்
2. பனிகாலம்
3. தைத்திருநாள்

(15புள்ளிகள்)

## பகுதி – 2

**1. பந்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

வாசிப்பு என்பது மாந்தனின் வெற்றிக்கு இன்றியமையாதது. செய்தித்தாள்கள் மற்றும் நல்ல நூல்களை வாசிப்பதன் மூலம் எமது வாசிப்புத்திறனை வளர்த்துக் கொள்ள முடியும். வாசிப்பதனால் எமது ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாகக் கழிக்கவும் பல செய்திகளை அறிந்து எமது அறிவை வளர்த்துக் கொள்ளவும் முடியும். பெற்றோர் சிறு வயதிலிருந்தே பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டுதல் வேண்டும். நிறைய வாசிப்பதன் மூலம் தாங்களும் எழுத வேண்டும் என்ற உணர்வு தோன்றும். வாசிப்புத்திறன் அதிகரிக்க எழுத்துத்திறன் அதிகரிக்கும். அதனால், எழுத்துப் பிழையின்றி எழுதுவதற்கும் வாசிப்பு உதவுகிறது. வாசித்த விடயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் அவற்றை மனத்தில் பதிய வைத்துக் கொள்ளவும் முடியும்.

1. மாந்தனின் வெற்றிக்கு இன்றியமையாதது எது?

______________________________

2. எமது வாசிப்புத்திறனை எவ்வாறு வளர்த்துக் கொள்ளலாம்?

______________________________

3. நிறைய வாசிப்பதன் மூலம் தோன்றும் உணர்வு யாது?

______________________________

4. வாசித்த விடயங்களை எவ்வாறு மனத்தில் பதிய வைத்துக் கொள்ள முடியும்?

______________________________

5. வாசிப்பதனால் ஏற்படும் நன்மைகளுள் ஒன்றினை எழுதுக.

______________________________

(5X2=10 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் தகவல்களைப் படித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

நாட்டார் கலைகளை ஊரகக் கலைகள் என்றும் கூறுவர். காவடி, கும்மி போன்றன இக்கலைகளுள் அடங்கும்

அல்ப்சு மலைத் தொடர்களால் சூழப்பெற்ற அழகிய நாடு சுவிற்சர்லாந்து ஆகும்.

விளையாட்டுப்போட்டிகள் தன்னம்பிக்கையையும் வெற்றி, தோல்வியைச் சமமாக மதிக்கும் பண்பையும் வளர்க்கின்றன.

தமிழ் வளர்த்த அறிஞர்களுள் விபுலாநந்தர், பாரதியார் போன்றோரும் அடங்குவர்.

தாய்மொழி நாள் பெப்ரவரி 21ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

1. காவடி என்பது நாட்டார் கலையாகும். ( )
2. தமிழ் வளர்த்த அறிஞர்களுள் விபுலாநந்தரும் ஒருவர். ( )
3. விளையாட்டுப் போட்டிகள் தன்னம்பிக்கையை வளர்ப்பதில்லை. ( )
4. பெப்ரவரி 21 தாய்மொழி நாள் ஆகும். ( )
5. அல்ப்சு மலைத்தொடர்கள் யப்பான் நாட்டில் உள்ளது. ( )

(5X1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 15 | | | |
| 2 | 08 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 06 | | | |
| 5 | 06 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |